<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 165/2022

இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரஞ்சித்குமார் | தொழில் | : கம்பெனி தொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : துரைசாமி | கிராமம் | : போயம்பாளையம் |
| வயது | : 42 | தாலூக்கா | : திருப்பூர் வடக்கு |
| நாள் | : 06-08-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) தாவாச் சொத்தை என் அப்பா துரைசாமி மற்றும் என்அம்மா சந்திரிகா இருவரும் கிரயம் பெற்றார்கள் என்றால் சரிதான். என் பெற்றோருக்கு நானும் என் தம்பியும் வாரிசுகள் ஆவார்கள். தாவா யார் மேல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இருளப்பன் மற்றும் பழனியப்பன் மீது தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் வேலன் அவென்யூவில் நிரந்தரமாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பழனியப்பன் அவர் மனைவி பெயரில் இடம் வாங்கி வீடு கட்டி உள்ளார் என்றால் வீடு கட்டி உள்ளது தெரியும். இடம் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

2)தாவாவில் என் தம்பியையும், பழனியப்பன் மனைவியையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. மனையின் வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வேலன் அவென்யூவில் யார் மனையிடங்களாக பிரித்து மனைகளை விற்பனை செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா தெரியும். சிவக்குமார் தான் விற்பனை செய்தார். சிவக்குமாருக்கு அந்த மனையிடங்களில் உரிமை இல்லை என்றாலும் சிவக்குமார் அங்கு ஒரு மனையிடத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

3) என் பெற்றோர் சிவக்குமாரிடம் கிரயம் பெறவில்லை என்றால் சரிதான். என் பெற்றோர் கிரயம் பெற்ற மனை எண் 21–ன் விஸ்தீரணம், மனை எண் 22–ன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. மனை எண் 21ன் விஸ்தீரணம் 1110 சதுரடி என்றால் எனக்கு தெரியாது. மனை எண் 22ன் விஸ்தீரணம் 1142 சதுரடி என்றால் எனக்கு தெரியாது. மனை எண் 21 மற்றும் 22ன் மொத்த விஸ்தீரணம் 2257 சதுரடி என்றால் சரியல்ல. என் பெற்றோர் 5750 சதுரடி கிரயம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

4) வேலன் அவென்யூவில் குடியிருப்போர் சேர்ந்து பிள்ளையார் கோவில் கட்டி உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கோவில் எந்த இடத்தில் அமைந்துள்ளது என்றால் மனை எண் 21, 22 ஒட்டி வடபுறத்தில் கிழக்குப் பார்த்து கட்டி உள்ளார்கள். அங்கு குடியிருப்போரும் பொது மக்களும் வழிபட்டு வருகிறார்கள் என்றால் சரிதான். பிள்ளையார் கோவிலுக்கு செல்ல தென்வடல் லே அவுட் பாதையில் தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். பிள்ளையார் கோவில் ரிசர்வ் மனையிடத்தில் கட்டப்பட்டுள்ளது என்றாலும், என் பெற்றோல் ரிசர்வ் மனையிடத்தையும் அந்த கோவிலக்கு செல்லும் தடத்தையும் சேர்த்து கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல.

5) என் பெற்றோர் கிரயம் பெற்ற ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வேலன் அவென்யூ இடத்தை கிரயம் செய்து கொடுத்தது இரத்தினசாமி தான். அவர் தற்போது காலமாகி விட்டார். வேலன் அவென்யூவின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. வேலன் அவென்யூவில் அமைந்துள்ள தடம், ரிசர்வ் இடம் 31.62 செண்ட்டை தானமாக இரத்தினசாமி தமிழக அரசுக்கு எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் எத்தனை செண்ட் எனக்கு தெரியாது. தமிழக அரசுக்கு எழுதிக் கொடுத்த ரிசர்வ் இடத்தில் தான் பிள்ளையார் கோவில் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) இரத்தினசாமி வேலன் அவென்யூவில் அமைந்துள்ள தடத்தை தமிழக அரசுக்கு எழுதிக் கொடுத்துவிட்டதால் அந்த பாதைகளில் நடந்து கொள்ள அனைவருக்கும் உரிமை உண்டு என்றால் சரியல்ல. பிள்ளையார் கோவிலுக்கு வரும் பொது மக்களையும், 25 அடி அகல தடத்தில் வருகிறவர்களையும் அந்த இடம் எனக்கு

பாத்தியப்பட்டது என்று இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. இரத்தினசாமி வேலன் அவென்யூவில் அமைந்துள்ள தடத்தை தமிழக அரசுக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தை ஒருதலைபட்சமாக ரத்து செய்தது செல்லாது என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் ஆவணம், தான செட்டில்மெண்ட் ரத்து ஆவணம், மனை வரைபடம் ஆகியவற்றை தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த தாவாவுக்கு பாதகமாக இருக்கும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7) தாவாச் சொத்தை சிவக்குமார் பூங்கொடி என்பவரிடமிருந்து என் பெற்றோருக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். என் பெற்றோருக்கு தாவாச் சொத்தை கிரயம் வாங்கிக் கொடுத்த தன்னாசி கருப்பன் என்ற சிவக்குமார் வேலன் நகரில் ஒரு மனையிடம் கிரயம் பெற்று வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனவே தன்னாசி கருப்பன் என்ற சிவக்குமாருக்கு வேலன் நகரில் உள்ள தடம், ரிசர்வ் இடம், மனை எண் 21, 22ன் விஸ்தீரணம் பற்றி தெரியும் என்றால் சரிதான். மனை எண் 21, 22 அதற்கு தொட்டாற்போல் ரிசர்வ் இடம் உள்ளது என்றால் சரிதான்.

8) தன்னாசி கருப்பன் என்ற சிவக்குமார் ரிசர்வ் இடம், தடம் ஆகியவற்றை மறைத்து அதிக விஸ்தீரணம் காண்பித்து என் பெற்றோருக்கு கிரயம் வாங்கிக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என் பெற்றோர் பெற்ற கிரயம் மனை எண் 21 மற்றும் 22க்கானது. ரிசர்வ் இடத்தை பொறுத்து பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால்சரியல்ல. இடங்களை அளந்து பார்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்சரிதான். மனையிடங்களில் வீடு கட்ட நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ரிசர்வ் இடத்தையும் சேர்த்து கிரயம் பெற்றுள்ளதால் இந்த தாவாவை பொறுத்து தடையுறுத்துக்கட்டளை பெற முடியாது என்றால் சரியல்ல.

9) பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தன்னாசி கருப்பன் என்ற சிவக்குமார் எத்தனை முறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் 2 முறை கொடுத்தார். தாவா நிலுவையில் இருக்கும்போது நான் காவல் நிலையத்தில் பிரதிவாதிகளின் மீது ஏன் புகார்

கொடுத்தேன் என்றால் ஆமாம். என் பெற்றோர் கிரயம் பெற்ற ஆவணத்தின்படி அவர்கள் வருவதை தடை செய்தேன். பிரதிவாதிகளும், பொது மக்களும் நடந்து கொள்வதை தடை செய்யக்கூடாது என்றாலும், பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.